வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 03.07.2025 வியாழக்கிழமை இதழ் : 184 பக்கங்கள் : 12




# நிபந்தனை எதுவுமின்றியே இலங்கைக்கு உதவுகிறோம்

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா




கொழும்பு, ஜூலை 03

**இந்தியா இலங்கையின் மிகவும் நம்பகமான நண்பராகவும், மிகவும் நம்பத்தகுந்த பங்காளியாகவும் உள்ளது. நிபந்தனை இல்லாமல் நாங்கள் உதவிகளை செய்கிறோம். பதிலுக்கு நாங்கள் எதையும் கேட்பதில்லை. நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை வளர்ப்பதிலும் இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் நீடித்த உறவுகளை உருவாக்குவதிலும் இலங்கையின் உதவி மட்டுமே எங்களுக்கு தேவை - என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

அத்துடன், கொழும்பு - புதுடில்லி, யாழ்ப்பாணம் - ஹைதராபாத் போன்ற நகரங்களை இணைக்கும் ஒரு புதுமை வழித்தடத்தை உருவாக்கவும் அவர் முன்மொழிந்தார். இங்கு, தொடக்க நிலை நிறுவனங்கள் இணைந்து தீர்வுகளை உருவாக்கலாம் - கருத்துகளை பரிமாறலாம் - ஒன்றாக வளரலாம். இந்த வழித்தடம் சமூகங்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் டிஜிற்றல் யுகத்தில் பிராந்திய ஒத்துழைப்பின் வலிமையையும் வெளிப்படுத்தும்.

இலங்கை வந்துள்ள இந்திய

11



அரியாலை மனித புதைகுழி

## 37 மனித எலும்புக்கூடுகள் நேற்றுவரை அடையாளம்!

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 03

அரியாலை சித்துப்பாத்தி (செம்மணி) மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அடையாளம் காணப்பட்டவற்றில் இதுவரை 31 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

அரியாலை சித்துப்பாத்தி மயான மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக நேற்று

11



மடு அன்னையின் ஆடித் திருவிழா நேற்று இலட்சக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றவேளை மாதா பவனி வரும் காட்சி...! (செய்தி - பக்கம் 2இல்)

## அத்துமீறும் இந்திய மீனவர்கள் கைதாவர்; படகுகளும் பறிமுதல்!

### விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்கிறார் கடற்றொழில் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 03

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறினால் கைதுகள் தொடரும், படகுகள் பறிமுதல் செய்யப்படும். இவ்விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று அறிவித்துள்ளார் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்.

கொழும்பில் அவரின் அமைச்சு பணிமனையில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலானது எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கே பாதகமாக அமைந்துள்ளது. இது தொடர்பில் இந்திய தரப்புக்கும் தெரிவித்திருந்தோம். கடந்த மூன்று மாதங்களாக இந்திய மீனவர்களின் பிரச்னை இருக்கவில்லை. தற்போது மீண்டும் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைய ஆரம்பித்துள்ளனர். அவர்களை நாம் கைது செய்தோம்.

இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள்

11

## அரியாலை புதைகுழி வழக்கு; அரசு பூரண ஆதரவளிக்கும்!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 03

அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்கு அரசாங்கம் பூரண ஆதரவு அளிக்கும் என்று அரச பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்றையதினம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே

11

## 'அஸ்வெசும' உதவி பெற தகுதியானோர் பட்டியல் வெளியீடு

கொழும்பு, ஜூலை 03

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழ், கொடுப்பனவுகளை பெறத் தகுதியுடையவர்களின் பட்டியலை நலன்புரி நன்மைகள் சபை வெளியிட்டுள்ளது.

தொடர்புடைய பட்டியல் அனைத்து பிரதேச செயலக பணிமனைகளின் அறிவிப்பு பலகைகளிலும் கிராம உத்தியோகத்தர், விடயத்துக்கு பொறுப்பான அதிகாரிகளின் பணிமனை அறிவிப்பு பலகைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இந்தப் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் (www.wbb.gov.lk) வெளியிடப்

11

## அமெரிக்காவின் வரி சலுகை 9ஆம் திகதிக்குள் கிடைக்கும்!

### அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 03

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வழங்கிய கால அவகாசம் 9ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. அதற்கு முன்னர் இலங்கைக்கு சலுகை கிடைக்கக் கூடியவாறு அவரால் அறிவிக்கப்பட்ட வரி கொள்கைகளில் திருத்தங்களை ஏற்படுத்த முடியும் என்று நம்புவதாக அமைச்சரவை

11

## சுன்னாகத்தில் கோர விபத்து; இளைஞர்கள் இருவர் மரணம்!

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 03

மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக பயணித்த இளைஞர்கள் இருவர் மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்தனர். வீதியில் மாடு குறுக்கிட்டதால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இந்த விபத்து இடம்பெற்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம் வீதியில் சுன்னாகம் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில், சுன்னாகம் கந்தரோடையை சேர்ந்த 17, 18 வயது இளைஞர்களே உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் ஓர் இளைஞர் இரு நாட்களுக்கு முன்னரே புதிய மோட்டார் சைக்கிளை வாங்கியிருந்தார். இந்த நிலையில், இருவரும் நேற்று புன்னாலைக்கட்டுவனுக்கு சென்று விட்டு மீண்டும் சுன்னாகம் நோக்கி திரும்பியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் இருவரும் அதிவேகமாக பயணித்த நிலையில் வீதியில் மாடு குறுக்கிட்டுள்ளது. வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் மாட்டை விலத்தி அவர்கள் பயணிக்க முயன்ற நிலையில் வீதிக் கரையிலிருந்த மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியது. இதில், இருவரும் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் சொத்தை நாம் அபகரித்தால் எங்கள் சொத்துகளைத்தான் இழக்க வேண்டி வரும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூலை 03

போர் - இடப்பெயர்வுக்கு முன்னர் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையில் எப்படியொரு சமநிலை இருந்ததோ அதைப்போன்றதொரு நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பாடசாலையில் பதில் அதிபர் இ.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.



பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரும், சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ச.ஸ்ரீபவா னந்த ராஜாவும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலனும் கலந்துகொண்டனர்.

முன்னதாக பாடசாலைக்கு தனது நிலத்தை கொடுத்த அமரர் சுப்பிரமணியம் கனகசபையின் திருவுருவச் சிலையை ஆளுநர், திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வில் நகுலன் நூலும் வெளியீடும் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து ஆளுநர் பிரதமர் விருந்தினர் உரை ஆற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலி. வடக்கு பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசம். மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. பல குடும்பங்கள் இங்கு வந்து மீளக்குடியமர வேண்டியிருக்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூட மக்களை இன்னமும் குடியமர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது.

இடப்பெயர்வின் பின்னர் சொந்த இடத்தில் அடிப்படை வசதிகள் இல்லாது ஆரம்பிக்கப்பட்ட உங்களின் பாடசாலை இன்று படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. இந்தப் பாடசாலையில் பணியாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சரியான தலைமைத்துவமே அதற்குக்காரணம்.

அன்று அதிக மாணவர்களை கொண்டு இயங்கிய பாடசாலைகள் கூட இன்று இயங்க முடியாமல் மூடவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியை நோக்கி போரால் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் இப் பகுதிக்கு வருவதற்கு விரும்பவில்லை.

வலி. வடக்கை பொறுத்தவரை பாடசாலைகளில் வளப் பற்றாக்குறைகள் இருக் கின்றன. அதனை நிவர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு எங்க ளுக்கு இருக்கிறது. இந்த வருடம் நிதி ஒதுக்கப் பட்டுவிட்டதால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் இந்தப் பகுதி பாடசாலைகளின் கோரிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய காலத்தில் சொத்துக்களை மோசடி செய்து சொத்துக்களை - காணிகளைச் சேர்க்கும் பலர் இருக்கின்றனர். ஆனால் பாடசாலைகளுக்கு காணியைக் கொடுத்து உதவும் சுப்பிரமணியம் கனகசபை போன்ற எண்ணம் உள்ளவர்களால்தான் இன்றும் பல பாடசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பணத்தையோ, காணியையோ, சொத்துக்களையோ சேர்ப்பதால் நின்மதியையும் - சந்தோசத்தையம் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றவர் களுக்கு கொடுத்து உதவுவதால் மாத்திரமே நின்மதியான - சந்தோசமான வாழ்க்கையை வாழ முடியும். மாணவர்கள் இந்தப் பழக்கத்தை பழகவேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவ வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்தால் உங்களுக்கு உதவுவதற்கு பலர் வருவார்கள். பிறருடைய சொத்துக்களுக்கு ஆசைப்படக் கூடாது. அப்படி பிறர் சொத்தை நாம் அபகரித்தால் எங்கள் சொத்துக்களைத்தான் நாங்கள் இழக்க வேண்டிவரும் - என்றார்.

(அ)

# மன்னார் மடுத்திருத்தல ஆடி பெருவிழா நேற்று!

மன்னார், ஜூலை 03

மன்னார் மடுத்திருத்தல ஆடி மாத பெருவிழா நேற்று இலட்சக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

நேற்று காலை 6.15 மணியளவில், மன்னார் மறை மாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில்

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை,

குருநாகல் மறை மாவட்ட ஆயர் அந்தோனி பெரேரா ஆண்டகை, மடுத்திருத்தல பரிபாலகர் பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் கிறிஸ்து நேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து, திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து, மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்று, ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

இந்தத் திருவிழாவில், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அரச திணைக் களங்களின் தலைவர்கள் உள்ளடங்கலாக என, இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

கடந்த 23 ஆம் திகதி, கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில், நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று, நேற்று நற்கருணைப் பெருவிழா இடம்பெற்று நேற்று திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (அ)

# கிளிநொச்சியில் வெடிக்காத வெடிபொருட்கள் நேற்று மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 03

கிளிநொச்சி - வெற்றிலைகேணி பகுதியில் உள்ள தனியார் காணியொன்றிலிருந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெடிபொருட்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது 360 மில்லி மீற்றர் அளவிலான மூன்று குண்டுகளும் அமுக்க வெடி ஒன்றும் இனங் காணப்பட்டுள்ளது.

நேற்று தனியார் காணி உரிமையாளர் ஒருவர் தனது காணியினை துப்புரவு செய்த பொழுது மண்ணுள் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிப்பொருட்களை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, காணி உரிமையாளர் மருதங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இந்தநிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியை பெற்ற பின்னர் செயலிழக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

(அ)

# கிருஷாந்தி கொலை வழக்கின் சட்ட மருத்துவர் செம்மணியில்!

யாழ்ப்பாணம், ஜூலை 03

கிருஷாந்தி கொலை வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரியாகச் செயற்பட்ட கிளிபேர்ட் பெரேரா, அரியாலை சித்துப் பாத்தி புதை குழிப்பகுதிக்கு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை நேரில் சென்று தனது அனுப வத்தைப் பகிர்ந்து கொண்டார்.

தற்போது அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள சட்ட மருத்துவ அதிகாரிகளுடனும் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

கிருஷாந்தி கொலை வழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளில் பிரதான பங்களிப்பை சட்டமருத்துவ அதிகாரி கிளிபேர்ட் பெரேரா வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# வவுனியா ரயில் விபத்தில் தாயும் மகளும் படுகாயம்!

வவுனியா, ஜூலை 03

பாதுகாப்பற்ற புகையிரத கடவையை மோட்டார் சைக்கிளில் கடந்த தாயும் மகளும் ரயில் மோதியதில் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை வவுனியா - ஓமந்தை - பறண்நட்டகல் பகுதியில் ,டம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலே ,வ்வாறு மோட்டார் சைக்கிளை மோதியது. ,தில், படுகாயமடைந்த தாயும் மகளும் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தால் அரை மணி நேரம் தாமதமாக கொழும்பு நோக்கிப் பயணித்து.

(ஐ-10)

# யாழில் சர்வதேச தரத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 03

சர்வதேச தரத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் செயற்படானது, வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலாவது மாவட்டமாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வடக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகம் ப. பிரபாகர் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் இந் நிகழ்வானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஆகும்.

ஒருவருடைய வாழ்க்கைக்கு பிறப்புச் சான்றிதழ் மிகவும் முக்கியமானது எனவும் அந்த வகையில் 2021.01.01 இலிருந்து பிறந்த பிள்ளைகளுக்கு - சர்வதேச தரத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் செயற்படானது [illegible] வடக்கு கிழக்கு மாகாணத்தில்



முதலாவது மாவட்டமாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் விநியோகிக்கப்படுவது சிறப்பான விடயம் ஆகும்.

கியூ.ஆர் கோட்டினை உள்ளடக்கியதன் மூலம் இலகுவில் பிறப்புச் சான்றிதழை எடுக்ககூடிய வகையில் அமைந்துள்ளதுடன், ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து "எனது இலக்கம்" என்பது தேசிய அடையாள அட்டை இலக்கமாக வருவதன் மூலம் பிள்ளைக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் போதே தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தெரிந்து கொள்வதும் சிறப்பான விடயம்.

இச் சான்றிதழ் தமிழுடன் ஆங்கில மொழியும் சேர்த்து வழங்கப்படுவது சிறப்புக்குரியது. இதன் மூலம் மொழிபெயர்ப்பின் தேவைப்பாடு அவசியமற்றதாகின்றது. ஆதலால் பெற்றோர்கள் இவ் பிறப்புச் சான்றிதழ் பேணிப் பாதுகாக்க வேண்டும்-என்றார்.

இதனைத் தொடர்ந்து, தேசிய பிறப்புச் சான்றிதழை மாவட்ட செயலர் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு வழங்கினார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதி பதிவாளர் நாயகம், காணிப் பதிவாளர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக பதிவாளர்கள், கிராமிய பிரதேச பதிவாளர்கள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டார்கள்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.07.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## செம்மணி விவகாரம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் இலங்கை பயணத்தின்போது செம்மணி விவகாரத்தை ஒரு பேசுபொருளாக்கும் நோக்கில் கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்று நடைபெற்றிருந்தது. வோல்கர் குறித்த இடத்துக்கு சென்றுமிருந்தார். அவர் குறித்த இடத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே குறித்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், அங்கும் சிலரின் சில்மிஷங்களைக் காணக்கூடியதாக இருந்தது. யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நடைபெற்ற இது போன்ற பல கவனவீர்ப்பு நடவடிக்கைகள் அனைத்திலுமே இவ்வாறான குளறுபடிகளே நடந்திருந்தன. இவ்வாறான நடவடிக்கைகள் இறுதியில் பாதிக்கப்பட்டவர்களின் நியாயமான குரல்களை பரிகசிப்பதற்கே அதிகம் பயன்பட்டிருக்கின்றன. இதுவரை இடம்பெற்ற ஒரு கவனவீர்ப்பு நடவடிக்கை கூட அனைவரையும் உள்வாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, குழு வாதங்களை தூண்டவும் குறிப்பிட்ட சிலரை இழிவுபடுத்தும் நோக்கிலுமே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவர்களை இழிவுபடுத்தாத ஓர் எதிர்ப்பு நடவடிக்கையைக்கூட குறிப்பிட முடியாது.

ஒரு காலத்தில் செம்மணி என்றால் அது கிருஷாந்தி குமாரசாமி என்பதாக நோக்கப்பட்டது. அன்றைய சூழலில் செம்மணி என்பது அச்சத்துடன் நோக்கப்படும் ஒரு விடயமாகவே இருந்தது. அன்று அதுபற்றி பரவலாகப் பேசப்பட்ட போதிலும்கூட, பின்னர் அந்த விடயம் பலராலும் மறக்கப்பட்டு விட்டது. செம்மணியில் எலும்புக்கூடுகள் இருக்கின்றன என்று செய்திகள் வெளிவந்த நிலையில்தான் கிருஷாந்தி என்றும் ஒரு மாணவி கொல்லப்பட்டிருக்கிறார் என்னும் தகவலே பலருக்கும் நினைவுக்கு வந்திருக்கிறது. இதேவேளை, ஆர்வக்கோளாறுகளின் காரணமாக செம்மணியில் கண்டெடுக்கப்பட்டதாக செயற்கை நுண்ணறிவை கொண்டு உருவாக்கப்பட்ட ஒளிப்படங்களும் பகிரப்படுகின்றன. இது உண்மையை விடவும் பொய்யை உண்மையென்று நம்பும் நிலைமையை வேகமாக பரப்புகிறது.

காலத்துக்குக் காலம் இவ்வாறான விடயங்கள் பற்றி பேசுவதும் சில நாட்கள் அதுபற்றி உணர்ச்சிவசப்படுவதுமாகவே தமிழரின் "லொபி" முற்றுப் பெற்றுவிடுகிறது. யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், புலம்பெயர் அமைப்புகள் எனப் பலரும் பேசிவந்த எந்தவொரு விடயமும் ஒரு முறையான வேலைத்திட்ட வடிவத்தைப் பெறவில்லை. ஏனெனில், அப்படியான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி விடயங்களை முன்னெடுக்கக்கூடிய ஆளுமையுடன் எவரும் இருந்திருக்கவில்லை.

இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால் ஒரு காலத்தில் ஆயுத இயக்கங்கள் ஆங்கில எழுத்துகளை முன்னும் பின்னும் போட்டு இயக்கங்களை உருவாக்கியது போன்றுதான், 2009இற்கு பின்னர் பல புலம்பெயர் அமைப்புகள் முகம் காட்டின. ஆனால், அவை என்ன செய்தன - அவைக்கு என்ன நடந்தது? யாரும் அறியார். இன்று விடயங்களை திரும்பிப் பார்த்தால் தமிழரின் அரசியலோ கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு வந்துவிட்டது. மக்கள் குறுகிய நினைவாற்றலுடன் இருப்பதால் அவர்கள் இவ்வாறான கதைகள் எதையும் காவித்திரிவதுமில்லை. அதுவும் பலருக்கு வாய்ப்பாகி விடுகிறது.

செம்மணி விவகாரத்தை ஒரு நீதிக்கான குரலாக மாற்ற விரும்பினால் முதலில் குறித்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும். வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். இதில், தீண்டத்தக்கவர் - தீண்டத்தகாதவர் என்னும் பிளவுகள் இருக்கக்கூடாது. அப்படி இல்லையென்றால் இதுவும் சில நாள் உணர்ச்சிப் பெருக்கோடு சாதாரணமாகக் கடந்து போய்விடும்.

# பொருளாதார நெருக்கடியில் சிக்கபோகின்றது இலங்கை!

## ராஜித சேனாரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 03

இந்த ஆண்டு ஒகஸ்ட் மாத முடிவில் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அடுத்த ஆண்டின் முதல் காலப் பகுதியில் அது உக்கிரமடைய கூடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த நாட்டை பொருளாதாரத்தினால் மட்டுமே மீளமைக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி வேறு எந்த விதத்திலும் இதனை மாற்றியமைக்க முடியாது என கூறிய அவர், இந்த அரசிடம் காத்திரமான திட்டங்கள் இல்லாததால் ஊழல் ஒழிப்பு மற்றும் இதர காரணிகளை முன்னிலைப்படுத்துகின்றது எனவும் கூறினார்.

மேலும், தற்போதைய அரசாங்கத்திடம் பொருளாதாரத் திட்டம் இல்லாததால், எதிர்காலத்தில் நாடு மீண்டும் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாம் ஊழலைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் நாட்டின் உயிர்வாழ்வு பொருளாதாரத்தால் தீர்மானிக்கப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கலாமணி அரங்க திறப்பு விழாவும் காத்தவராயன் நாடக நூல் வெளியீடும்!



வடமராட்சி, ஜூலை 03

தம்பிஜயா கலாமணி அரங்க திறப்பு விழாவும் பா. இரகுவரனின் "காத்தவராயன் வழிபாடு - காத்தவராயன் நாடகம்" நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். வடமராட்சி அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் ஆலயத்தின் தம்பிஜயா கலாமணி அரங்கில் நடைபெற்றது.

ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தம்பிஜயா கலாமணி அரங்கை மறைந்த கலாமணியின் பாரியார் நாடாவெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து அரங்க திறப்புரையை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி ஆற்றினார்.

"காத்தவராயன் வழிபாடு - காத்தவராயன் நாடகம்" நூலின் முதல் பிரதியை அதன் ஆசிரியர் பா. இரகுவரன் வெளியிட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் க. திலகநாதன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து அவர் வெளியீட்டுரையையும் ஆற்றியிருந்தார்.

தொடர்ந்து நூல் தொடர்பிலான கருத்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இராஜேஷ்கண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் பா. இரகுவரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நிகழ்வு இரவு 11 மணிவரை சிறப் பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், ஊரவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 03

வீமன்காமம் மகா வித்தி யாலயத்தின் பரிசளிப்பு விழா வும் திறன் வகுப்பறை திறப்பு விழாவும் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவராசா மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய (நிர்வா கம்) பிரதி கல்வி பணிப்பாளர் நா. சிவநேசன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க. ஆதீத்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் ஆ. திருமூலன் நினைவுப் பேருரையையும் மாவை ஆதீன பிரதான சிவாச்சாரியார் ஷ. இ. ஞானஸ்கந்த குருக்கள் ஆசியுரையையும் வழங்குவர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 03 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 19
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : அஷ்டமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்ளுங்கள். மனதில் நிறைவு பெரும் நாள்.

**மிதுனம்** முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கடகம்** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்** கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**துலாம்** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழு பறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணி களை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்** உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக் கேற்ப நீங்கள் மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியா பாரத்தில் புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும்.

**தனுசு** மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்** உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்தகுச்சல் குழப்பம் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை சிறப்பாக முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**கும்பம்** சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை, பதற்றம் அதிக ரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்து கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**மீனம்** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

# அம்புலன்ஸ் சேவை இன்மையால நட்டங்கண்டல் மக்கள் சிரமம்!

### விரைவில் தீர்வு வரும் என்கிறார் மாவட்ட மருத்துவ அதிகாரி

முல்லைத்தீவு, ஜூலை 03

முல்லைத்தீவு - நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் கடந்த 15 நாட்களாக சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் இல்லாமையால் மாந்தை கிழக்கை சேர்ந்த தாங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று அந்தப் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தனர்.

குறிப்பாக பாண்டியன்குளம், மூன்று முறிப்பு, பனங்காமம், கரும்புள்ளியான் குளம், செல்வபுரம் கிராமங்களின் மக்கள் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனையின் சேவையை நம்பியே உள்ளனர். இந்த நிலையில், கடந்த 15 நாட்கள் அம்புலன்ஸ் வாகனம் சேவையில் இல்லாமையால் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்து தாம் மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு செல்லவேண்டிய துன்பநிலை உள்ளதாகவும் அந்த மக்கள் வேதனை தெரிவித்தனர்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, "குறித்த மருத்துவமனையில் பணியில் இருந்த சாரதி இடமாற்றம் பெற்றுள்ளார். இதனால், அங்கிருந்த அம்புலன்ஸ் வாகனம் மல்லாவி ஆதார மருத்துவமனையுடன் ,ணைப்பு செய்யப்பட்டுள்ளது. அவசர தேவைகளின்பொருட்டு அங்கு அம்புலன்ஸ் வாகனம் அனுப்பி வைக்கப்படுகிறது. வெற்றிடமாகவுள்ள சாரதி பதவிக்கு ஓரிரு நாட்களுக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்கப் படும்", என்று கூறினார். (ஜ-07)

# போருக்கு முன்னர் இருந்தபோல் மாணவர் சமநிலை அவசியம்!

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூலை 03

போர் - இடப்பெயர்வுக்கு முன்னர் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையில் எப்படியொரு சமநிலை இருந்ததோ அதைப்போன்றதொரு நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வலி. வடக்கு பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசம். மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. பல குடும்பங்கள் இங்கு வந்து மீளக்குடியமர வேண்டியிருக்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூட மக்களை இன்னமும் குடியமர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது.

இடப்பெயர்வின் பின்னர் சொந்த இடத்தில் அடிப்படை வசதிகள் இல்லாது ஆரம்பிக்கப்பட்ட உங்களின் பாடசாலை இன்று படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்தப் பாடசாலையில் பணியாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சரியான தலைமைத்துவமே அதற்குக் காரணம்.

அன்று அதிக மாணவர்களை கொண்டு இயங்கிய பாடசாலைகள்கூட இன்று இயங்க முடியாமல் மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியை நோக்கி போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இப்பகுதிக்கு வருவதற்கு விரும்பவில்லை.

வலி. வடக்கை பொறுத்தவரை பாடசாலைகளில் வளப் பற்றாக்குறைகள் இருக்கின்றன. அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டதால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் இந்தப் பகுதி பாடசாலைகளின் கோரிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய காலத்தில் மோசடி செய்து சொத்துகளை - காணிகளை சேர்க்கும் பலர் இருக்கின்றனர். ஆனால், பாடசாலைகளுக்கு காணியை கொடுத்து உதவும் சுப்பிரமணியம் கனகசபை போன்ற எண்ணம் உள்ளவர்களால்தான் இன்றும் பல பாடசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பணத்தையோ, காணியையோ, சொத்துகளையோ சேர்ப்பதால் நிம்மதியையும் - சந்தோசத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்கு கொடுத்து உதவுவதால் மாத்திரமே நின்மதியான - சந்தோசமான வாழ்க்கையை வாழ முடியும். மாணவர்கள் இந்தப் பழக்கத்தை பழகவேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவ வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும். பிறருடைய சொத்துகளுக்கு ஆசைப்படக் கூடாது. அப்படி பிறர் சொத்தை நாம் அபகரித்தால் எங்கள் சொத்துகளைத்தான் நாங்கள் இழக்கவேண்டிவரும் - என்றார். (ஐ)

### தாய்லாந்து கராத்தே போட்டி:

# சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவனுக்கு வெண்கலம்!



யாழ்ப்பாணம் ஜூலை 03

தாய்லாந்து கராத்தே சுற்று போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜே. ஆர். பியன் பெனோ வெண்கல பதக்கம் வென்றுள்ளார்.

பாங்கொக்கில் நடந்த தாய் லாந்து திறந்த கராத்தே சுற்றுப் போட்டியில் குழு காட்டா பிரி வில் சென். பற்றிக்ஸ் மாணவன் ஜோன் றஜீவ் பியன் பெனோ பங்கேற்றார். இதில், இவர் மூன் றாமிடத்தை பெற்று வெண்கல பதக்கம் வென்றார்.

இலங்கை கராத்தே தேசிய அணிக்கு தெரிவான முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர் இவரே என்பதுடன், 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட 18 வயதுக்கு உட்பட்டோ ருக்கான தைகொண்டோ போட் டியிலும் [illegible] என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஐ)

# பூநகரி விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 03

பூநகரியில் இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மிருசுவிலை சேர்ந்த 27 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை பூநகரியில் வானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. இதில், மோட்டார் சைக்கிளும் வானும் தீப்பற்றி எரிந்தன. இந்த விபத்தில் ஐவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

இதேசமயம், வானின் சாரதியை கைது செய்துள்ள பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை தடுக்க புதிய சட்டங்கள் விரைவில்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஜூலை 03

**திட்டமிட்ட குற்றங்களை கையாள்வதற்கு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

பயங்கரவாத ஒடுக்குமுறைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான கொள்கை முடிவை அரசாங்கம் தற்போது எட்டியுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கைது செய்யப்படும் திட்டமிட்ட குற்றவாளிகள் பயங்கரவாத ஒடுக்குமுறைச் சட்டத்தின் விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் கூறினார்.

இந்தச் சட்டம் ரத்து செய்யப்படுவதன் காரணமாக , திட்டமிட்ட குற்றவாளிகளை தடுத்து வைத்து விசாரிக்க புதிய சட்ட விதிகள் தேவை என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நீதி அமைச்சின் தலையீட்டால் தற்போது தொடர்புடைய புதிய மசோதா வரைவு செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# பஸ் கட்டணங்களை குறைப்பது போதாது

கொழும்பு, ஜூலை 03

பஸ் கட்டணங்களைக் குறைப்பது மட்டும் போதாது என்று அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வருடாந்த பஸ் கட்டண திருத்தம் 0.55 வீதம் குறைக்கப்பட்டிருந்தாலும், பஸ் கட்டணங்களை மேலும் குறைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலைகள் மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் அதிகரிப்பு குறித்து அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறினார்.

வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தின்படி ஜூலை4 ஆம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்களை 0.55 வீதம் குறைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. (அ)

# சமாதான நீதிவான் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 03

சமாதான நீதிவான்களை (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக்கோவை) கட்டளைகளைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமாதான நீதிவான் பதவிக்கு நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை, முடிவுறுத்துகைக்கான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2360/22 ஆம் இலக்க 2023.11.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சமாதான நீதிவான்களை (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை, மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த ஒழுங்குவிதிகள் திருத்தம் செய்யப்பட்டு திருத்தப்பட்ட கட்டளை 2439/34 ஆம் இலக்க 2025.06.04 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# அர்ச்சுனாவுக்கு எதிரான மனு விசாரணை செய்ய அனுமதி

கொழும்பு, ஜூலை 03

இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் என்பவரால் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி அசோக் பரன், "இராமநாதன் அர்ச்சுனா யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிந்தெடுக்கப்பட்ட காலப்பகுதியில் வைத்தியர் துறையிலிருந்து பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்துள்ளார்.

இதனால் அரசியலமைப்புச் சட்டத்தின்படி இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர் " என தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்காக ஆஜரான சட்டத்தரணி சேனானி தயாரத்ன, தனது கட்சிக்காரர் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது சம்பளம் இன்றி சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதால், அவரை ஒரு அரசாங்க ஊழியராகக் கருத முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அதன்படி, அவர் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்த சட்டத் தடையும் இல்லை என்று சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்தது.

இதேவேளை, இந்த மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதை தடுக்கும் வகையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்கப் போவதில்லை என்று நீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக்கான 5 ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்துக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 03

தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐந்தாண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட "சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை" இற்கு 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தேசியக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பத்து விடயத்துறைகளை உள்ளடக்கியதாக அதற்காக செயலாற்றுகின்ற பங்காளர்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் கருத்தில் கொண்டு "தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐந்தாண்டு தேசிய செயற்பாட் டுத் திட்டம்" தயாரிக்கப்பட் டுள்ளது.

தேசிய கொள்கைச் சட்டகத்தின் "பாதுகாப்பான சிறுவர் உலகம் - ஆக்கபூர்வமான எதிர்கால சந்ததி" இற்கான கொள்கை ரீதியான கடப்பாடுகளுக்கு அனைத்துவித இணக்கப்பாடுகளுக்கமைய பல்துறைசார் அணுகுமுறையுடன் கூடிய குறித்த ஐந்தாண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# கண்களில் மிளகாய் தூளை தூவி வழிப்பறிக் கொள்ளை!

கொழும்பு, ஜூலை 03

பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டதாக கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் தாயும் மகனும் மஹவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்களான தாயும் மகனும் குருநாகல் - வாரியப்பொல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபரான தந்தை பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் பின்னர் தலதாகம - மஹவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதுடைய தந்தையும் 22 வயதுடைய தாயும் 15 வயதுடைய மகனுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் பல்வேறு பிரதேசங்களில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் பெண்களின் கண்களில் மிளகாய் தூளை தூவி அவர்களிடம் உள்ள பணம் மற்றும்தங்க நகைகளை கொள்ளை யிட்டுச் செல்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈ-8 வீசா வகை வேலைவாய்ப்புகளை விரைவில் செயல்படுத்துவதற்கு திட்டம்

கொழும்பு, ஜூலை 03

தென் கொரியாவில் பருவகால வேலைவாய்ப்புக்கான ஈ-8 விசா வகை வேலை வாய்ப்புகளை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதற்கான திட்டம் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, அந்த அனுமதி கிடைத்த பிறகு, தென் கொரியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையெழுத்திடப்படும், பின்னர் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்காக அனுப்பப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது, தென் கொரியாவில் 04 மாகாணங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இம்மாதம் 10 ஆம் திகதிக்குள் அவை கையெழுத்திடப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

'ஜூலை மாத இறுதிக்குள் ஈ-8 விசா பிரிவின் கீழ் முதல் குழுவை தென் கொரியாவிற்கு அனுப்ப எதிர்பார்க்கிறோம். அதற்காக, அந்நாட்டின் 04 மாகாணங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையெழுத்திட நாங்கள் தயாராக உள்ளோம்.

இதன் கீழ், தென் கொரியாவில் பருவகால வேலைகளுக்காக ஆண்டொன்றுக்கு முடியுமான அளவு அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை அனுப்ப நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதற்கான ஆட்சேர்ப்புக்கள் அரசாங்கத்தால் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதுடன், தனியார் துறையினருக்கு இதற்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அழைத்தால் ஜெனிவா மாநாட்டில் பங்கேற்க தயார்!

## சரத் வீரசேகர அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 03

**ஜெனிவா மாநாட்டில் பங்கேற்குமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்தால், நாட்டுக்காக பங்கேற்று கருத்துகளை முன்வைப்பதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

உணவு, மருந்து விநியோகம் தடுப்பு உட்பட இலங்கை தொடர்பான 8 போர்க் குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதை நாம் ஜெனிவா தொட ரில் நிரூபித்துள்ளோம். ஆவணங்களையும் கையளித்திருந்தேன்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவா தொடர் ஆரம்பமாகின்றது. இதன் போது இலங்கை தொடர்பான போர்க் குற்றச்சாட்டுகளை வெளிவிவகார அமைச்சு நிராகரிக்கவேண்டும்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் அனுபவமுள்ள அதிகாரிகள் வெளிவிவகார அமைச்சில் இருக்கின்றனர். சிலவேளை எனக்கு அழைப்பு விடுத்தால் நானும் பங்கேற்க தயார். வெளிவிவகார அமைச்சுடனும் இது பற்றி பேச்சு நடத்தலாம்.

ஆனால் 46ஃ1 தீர்மானத்தின் பாரதூரத்தன்மை தற்போதைய அரசாங்கத்தக்கு புரியவில்லை போல் தெரிகின்றது. சாட்சி திரட்டும் நடவடிக்கைகூட இடம்பெறுகின்றது-என்றார். (அ)

# ஸ்டார்லிங்க் இப்பொழுது இலங்கையில் கிடைக்கிறது

கொழும்பு, ஜூலை 03

தனக்குச் சொந்தமான செயற்கைக்கோள் இணைய சேவையான ஸ்டார்லிங்க் இப்போது இலங்கையில் கிடைப்பதாக பில்லியனர் எலோன் மஸ்க் அறிவித்துள்ளார்.

இது குறித்து எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ள அவர்,

ஸ்டார்லிங்க் இப்போது இலங்கையில் கிடைக்கிறது என்று கூறியுள்ளார்.

இலங்கையின் தொலைத்தொடர்பு சட்டத்தில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவைகளை அனுமதிக்கும் திருத்தத்தைத் தொடர்ந்து, 2024 ஓகஸ்ட் மாதம் ஸ்டார்லிங்க் ஒழுங்குமுறை ஒப்புதலைப் பெற்றது.

கடந்த வாரம், டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, ஸ்டார்லிங்க் குறித்த ஒரு முன்னோடித் திட்டம் ஏற்கனவே நடைபெற்று வருவதாகக் கூறினார்.

எலான் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் நிறுவனம் செயற்கைக் கோள் அடிப்படையிலான இணைய சேவையை வழங்கி வருகிறது.

இது தற்போது கிட்டத்தட்ட 100 நாடுகளில் செயல்பாட்டில் உள்ளது-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# 2026 ஆம் ஆண்டு பட்ஜெட் நவம்பரில்!

கொழும்பு, ஜூலை 03

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு சட்டமூலத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

"உற்பத்திப் பொருளாதாரம் மற்றும் அனைவரையும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கெடுக்கச்செய்தல்" எனும் தொனிப் பொருளை அடிப்ப டையாகக் கொண்டு 2026-2030 அரச நிதிச் சட்டகம் மற்றும் அரச நிதி மூலோபாயக் கூற்று மற்றும் தேசிய கொள் கைச் சட்டகமான "செழிப்பான நாடு - அழகான வாழ்வு" எனும் கொள்கைச் சட்டகத்திற்கமைய 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது தேசிய கொள்கைச் சட்டகத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள முன்னுரிமைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் தொடக்க முயற்சிகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரச கொள்கைப் பிரகடனத் திற்கமைய அமைச்சுக்களின் விடயதானங்களின் கீழ் அந்தந்த அமைச்சுக்கள் அடையாளங் கண்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு அனைத்து அமைச்சுக்களிடமிருந்தும் முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய, 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை 2025 ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதன் இரண்டாம் வாசிப்பு (வரவு-செலவுத்திட்ட உரையை) 2025 நவம்பர் மாதத்தில் நடாத்துவதற்கும், மூன்றாம் வாசிப்பின் வரவு செலவுத்திட்ட விவாதத்தை 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடாத்துவதற்கு இயலுமாகும் வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# தேசபந்து வழக்கு எழுத்துமூல சமர்ப்பிப்புக்கு காலக்கெடு

கொழும்பு, ஜூலை 03

பொலிஸ்மா அதிபர் ரி.எம். டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனினால் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் மற்றும் முறைப்பாட்டாளரின் சாட்சியங்கள் மீதான விசாரணைகள் நேற்று முன் தினம் முடிவுக்கு வந்தன.

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம். என்.பி. இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ.எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழு முன்னிலையில் நேற்று முன் தினம் முறைப்பாட்டாளர் சார்பிலான இரண்டு சாட்சியாளர்கள் சாட்சியளித்திருந்தனர்.

அத்துடன், இரு தரப்பின் எழுத்துமூல சமர்ப்பிப்புக்களையும் ஜூலை மாதம் 8ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் குழு முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கும் பிரதிவாதியின் தரப்பினரும் இணங்கினர். (அ)

# சந்தேகத்திற்கிடமான முறையில் 23 வயது யுவதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 03

நுவரெலியாவில் வலப்பனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் யுவதி ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

வலப்பனை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த யுவதி குறித்த வீட்டில் வசித்து வந்துள்ளதுடன் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்துக்கு பதில் இயக்குநர்

கொழும்பு, ஜூலை 03

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் பதில் இயக்குநர் ஜெனரலாகவும், தலைமை நிர்வாக அதிகாரியாகவும் ரேஹான் வண்ணியப்பா நியமிக்கப்பட்டுள்ளார்.

வன்னியப்பா 2003 முதல் பல்வேறு முக்கிய பதவிகளில் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தில் பணியாற்றி வருகிறார்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்துடனும், இந்தத் துறையைப் பற்றிய ஆழமான புரிதலுடனும், அவரது தலைமைத்துவம் இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறையில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உந்துவதாக எதிர்பார்க்கப்படுகிறது என்று சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது. (அ)

# யோஷித, பாட்டிக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, ஜூலை 03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரஸ்ட் விக்ரமசிங்க ஆகியோர் மீது பண மோசடி சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன்னிலையில் நேற்று குற்றப்பத்திரிகைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பின்னர், யோஷித ராஜபக்ஷவும் அவரது பாட்டி டெய்சி பொரஸ்ட் விக்ரமசிங்கவும் தலா 1 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இருவருக்கும் சொந்தமான ரூ.59 மில்லியன் கூட்டுக் கணக்கு தொடர்பான பண மோசடி சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ)

# சிறுபோக நெல் அறுவடைக்காக அரச களஞ்சியங்கள் திறக்கப்படும்

கொழும்பு, ஜூலை 03

சிறுபோக அறுவடை ஏற்கனவே தொடங்கியுள்ள நிலையில், அதன்படி, இன்று முதல் அரசு களஞ்சியசாலைகள் அறுவடை இடங்களில் திறக்கப்பட்டு நெல் கொள்முதலை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் பிற குழுக்களுடன் சமீபத்தில் நடைபெற்ற கூட்டுக் கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறிய பிரதியமைச்சர், அதன்படி, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வடமேல் மற்றும் தென் பிரதேசங்களில் நெல் கொள்முதல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது நெல் கொள்முதல் செய்வதற்கு 600 மில்லியன் ரூபாய் இருப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு கிலோ நாட்டு நெல் ரூ.120க்கும், ஒரு கிலோ சம்பா நெல் ரூ.125 இற்கும், ஒரு கிலோ கீரிச் சம்பா நெல் ரூ.132 இற்கும் அரசு களஞ்சியசாலைகளில் கொள்வனவு செய்யப்படும் என்றும், இந்த களஞ்சியசாலைகளுக்கு அனைத்து விவசாயிகளும் தரப்படுத்தப்பட்ட நெல்லை வழங்க முடியும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

இதற்கிடையில், இந்த முறை ஈரமான நெல்லுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, ஒரு கிலோ நாட்டு நெல் ரூ. 102, ஒரு கிலோ சம்பா நெல் ரூ. 105 மற்றும் ஒரு கிலோ கீரி சம்பா நெல் ரூ. 112 என விவசாயிகள் விற்பனை செய்யலாம்.

அரசு களஞ்சியசாலைகளில் ஈரமான நெல்லை பெற முடியாத நிலை இருப்பதாகவும் கூறிய பிரதியமைச்சர், விவசாயிகள் அநீதி இழைக்கப்படாமல் இருக்க அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் [illegible]. (அ)

# அதிவேக வீதியில் விபத்து ஒருவர் பலி! 07 பேர் காயம்!!

கொழும்பு, ஜூலை 03

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 76.5 ஆவது கிலோ மீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சொகுசு பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது சொகுசு பஸ்ஸில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# செம்மணி புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## தென்பகுதி செயற்பாட்டாளர் கருத்து

கொழும்பு, ஜுலை 03

**யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் கொடூரமாக கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களுக்கு நீதியை இந்த அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என தென்பகுதி சிங்கள சமூக செயற்பாட்டாளரான அர்ஜுன தெரிவித்துள்ளார்.**

காணொளி ஒன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூடுகள் அகழப்படுகின்றன.

இதில் சிறுவர்கள், பெரியோர்கள் என கொடூரமாக கொலை செய்யப்பட்டோரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த பிரச்சனையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த விடயம் குறித்து சிங்கள மக்களாகிய நாங்களும் தமிழ் மக்களுடன் இணைந்து ஒன்றாக இருக்கின்றோம்.

யுத்த காலத்தில் ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நீண்ட காலமாக அவர்களை தேடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இந்த அரசாங்கத்திடம் நாங்கள் கேட்பது என்னவெனில், இதற்கு ஒரு தீர்வினை வழங்குங்கள்.

இதனால் அமைச்சர்களுக்கும் பெரிய பிரச்சினை இருக்கின்ற அதேவேளை மக்களுக்கும் பிரச்னை உள்ளது.

புதிய அரசாங்கத்திடம் இருந்து இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால் தான் மக்களுக்கு தீர்வு கிடைக்கும்-என்றார். (அ)

# ஒன்லைன் போக்குவரத்து அபராதம் செலுத்தலுக்கு அமைச்சரவை அனுமதி



கொழும்பு, ஜுலை 03

நாடு முழுவதும் ஒன்லைன் போக்குவரத்து அபராதம் செலுத்தும் முறையை செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு கட்டாய சீட் பெல்ட் பயன்பாடு குறித்த பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து, கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த முன்மொழிவுக்கு இன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தற்போது, குருநாகல் மற்றும் அநுராதபுரம் இடையே மட்டுமே ஒன்லைன் அபராதம் செலுத்தும் முறை உள்ளது.

இப்போது, அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் மொபைல் சாதனங்களை வழங்குகிறோம்.

இதனால் இந்த ஆண்டு முதல், போக்குவரத்து அபராதங்களை மொபைல் போன்கள் மூலம் எங்கிருந்தும் செலுத்த முடியும்-என்றார். (அ)

# ஜுன் மாதத்தில் நாட்டுக்கு 138,241 சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, ஜுலை 03

கடந்த ஜுன் மாதத்தில் மொத்தம் 138,241 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைத் தரவுகள் காட்டுகின்றன.

இது 2024 ஜுன் மாதத்தில் வந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 21.8 வீதம் அதிகமாகும்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அண்மைய தரவுகளின் படி,

கடந்த ஜுன் மாதத்தில் இந்தியாவில் இருந்து மொத்தம் 37,934 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர், இது 27.4மூ ஆகும்.

மேலும், இங்கிலாந்திலிருந்து 11,628 பேரும், சீனாவிலிருந்து 8,804 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து 7,299 பேரும், பாகிஸ்தானியர் 6,833 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,168,044 ஆக உள்ளது.

அவர்களில், 241,994 பேர் இந்தியாவிலிருந்தும், 112,312 பேர் ரஷ்யாவிலிருந்தும், 107,902 பேர் இங்கிலாந்திலிருந்தும் வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டது .

# முதலீட்டு வாய்ப்பு குறித்து இந்திய முதலீட்டாளர் ஆய்வு

கொழும்பு, ஜுலை 03

நாட்டின் எரிசக்தி, உள்கட்டமைப்பு, டிஜிற்றல் பொருளாதாரம், சுற்றுலா, விவசாயம் மற்றும் தொழில்முனைவோரின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் கவனம் செலுத்தியுள்ளதாக இந்திய தொழில்முனைவோர் தெரிவித்தனர்.

தற்போதுள்ள முதலீட்டு வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துதல், புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் பல முக்கிய இந்திய நிறுவனங்களின் பிரதானிகள் உட்பட சுமார் 20 இந்திய தொழில்முனைவோர் குழு எமது நாட்டில் செயல்பாட்டிலுள்ள திட்டமொன்றில் பங்கேற்கிறது. இந்தக் குழு நேற்று முன் தினம் ஜனாதிபதி பணிமனையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு அண்மையில் மேற்கொண்ட உத்தியோக பூர்வ பயணத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அழைப்பின் பேரில் இந்தக் குழு இலங்கை வந்துள்ளது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுடனும் இலங்கை முதலீட்டுச் சபை போன்ற முன்னணி அரச நிறுவனங்களுடன் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை முதலீட்டாளர்களுக்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்கியுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் சிறந்த பொருளாதார நிலைமை மற்றும் முதலீட்டிற்கு உகந்த சூழலை உருவாக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இந்திய தொழில்முனைவோருக்கு ஜனாதிபதி விளக்கினார். பெருமளவிலான முதலீடுகளைத் தக்கவைத்து அவற்றைப் பராமரிக்க தேவையான சட்ட கட்டமைப்பும், நிறுவன கட்டமைப்பும் வலுப்படுத் தப்பட்டுள்ளதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முதலீடுகளில் வீண் விரயம் மற்றும் ஊழலைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறிப்பாக பிராந்திய முதலீட்டாளர்களை எளிதாக ஈர்ப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பல துறைகளில் புதிய வணிக வாய்ப்புகளுக்கு வாய்ப்புள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் மூலோபாய இருப்பிடம் முதலீட்டாளர்களிடமிருந்து வலுவான ஆர்வத்தை ஈர்த்துள்ளது என்று கூறிய இந்திய தொழில்முனைவோர், இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதியின் தெளிவுபடுத்தலைப் பாராட்டியதோடு அது அவர்களுக்கு ஊக்கத்தையும் புதிய நம்பிக்கையையும் அளித்துள்ளது என்றும் கூறினர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போலி டொலர்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுலை 03

ஆறு போலி டொலர் நாணயத்தாள்களுடன் மினுவாங்கொடை பொலிஸாரால் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் பிற்பகல் மினுவாங்கொடை நகரில் உள்ள ஒரு வங்கியில் சோதனை நடத்தப்பட்டபோது 06 போலி டொலர் நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் ரஸ்நாயக்கபுர பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளதுடன், மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் 13 நாடுகளுக்கு புதிய சட்டம் அமுல்

கொழும்பு, ஜுலை 03

சர்வதேச நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக செல்பவர்களுக்கான புதிய சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.13 நாடுகளில் இப்புதிய சட்டம் அமுலுக்கு வரவுள்ளது.

சுயதொழில் மூலமான தொழில்துறை மற்றும் நிறுவனத் துறை வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்கள்,குறித்த நாடுகளில் வேலை வாய்ப்பு ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த வேண்டியதை சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அமுல்படுத் தியுள்ளன. ஏற்கனவே கடந்த ஜுன் 07 ஆம் திகதி முதல் இதனை நடைமுறைப் படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. நேற்று முன் தினம் வரை இந்த நடைமுறை ஒத்திவைக்கப்பட்டதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

புதிய நடைமுறைக்கு அமைய, சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான், இஸ்ரேல், ஜோர்தான், லெபனான், மாலைதீவு, மலே சியா, சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்புக்கு செல்வோர் இப்பதிய திட்டத்தை பின்பற்றுவது அவசியமாக்கப்பட்டுள்ளது. இதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பதிவைப் பெறுவதற்கு அவர்களின் சேவை ஒப்பந்தம் அந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் தொழிலாளர் மற்றும் நலன்புரிப் பிரிவுகளால் சான்றளிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதற்காக 60 அமெரிக்க டொலர் கட்டணம் செலுத்தப்படவேண்டும் எனவும் கடந்த காலங்களில், ஆட்கடத்தல் காரணமாக இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட பிரச்னைகளுக்கு தீர்வாகவே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப்படுகிறது. (அ)

# எரிபொருளுக்கான நிலையான விலையை நிர்ணயிக்க அவதானம்

கொழும்பு, ஜுலை 03

எரிபொருளுக்கான நிலையான விலையை நிர்ணயிப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலை அதிகரிப்பானது மக்களுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்திருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

எரிபொருள் விலை அதிகரிப்பானது கவலையளிக்கின்றது.

அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு சுமைகளை திணித்து மகிழ்ச்சியடைவதல்ல.

நாட்டின் பொருளாதார மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பல பிரயத்தனங்களை முன்னெடுத்து வருகிறது. அதற்காக சில கடினமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவேதான் எரிபொருளுக்கான நிலையான விலையை நிர்ணயிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம். அவ்வாறான தீர்மானமானது சகலருக்கும் நன்மை பயக்கும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தடுப்பு காவல்களில் 49 இறப்புகள் பதிவாகியுள்ளன!

## மனித உரிமைகள் ஆணைக்குழு

கல்முனை, ஜூலை 03

**நாடு முழுவதும் பொலிஸ் தடுப்புக் காவலில் 49 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை இணைப்பதிகாரி அப்துல் அலீஸ் தெரிவித்துள்ளார்.**


அத்துடன், தடுப்புக் காவலில் உள்ள போதும் - பொலிஸாருடனான மோதல்களின் போதும் - சுட்டுக் கொல்லப்படுதல் போன்ற மரணங்களை தவிர்ப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கடந்த 2020 ஜனவரி முதல் 2023 மார்ச் வரையில் நாடு முழுவதும் 49 தடுப்புக் காவல் மரணங்கள் நிகழ்ந்தன என்று சர்வதேச சித்திரவதைகளுக்கு எதிரான தினத்தையொட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு செயலமர்வில் அவர் இதனைக் கூறினார்.

தவிர, பொலிஸ் நிலையங்கள், அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக்காவல் நிலையங்கள், விசாரணக்கூடங்கள், மறியல் கூடங்கள் மற்றும் முக்கிய இடங்களில் கண்காணிப்பு கமெரா பொருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

(ஐ)

# சித்திவிநாயகர் தேர் திருவிழா வெகுசிறப்புடன் நடைபெற்றது



மட்டக்களப்பு, ஜூலை 03

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை, நொச்சிமுனை சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது வேத பாராயணங்கள் ஒலிக்க, தாளவாத்தியங்கள் முழங்க, பக்தர்களின் அரோகரா கோஷம் விண்ணை முட்ட, விநாயகப் பெருமான் தேரேறி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்து. நேற்றைய தினம் தீர்த்தத் திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவடைந்தது.

(ஐ)

# அம்பாறைக்கு புதிய பிரதி பொலிஸ் மா அதிபர் நியமனம்



கல்முனை, ஜூலை 03

அம்பாறை மாவட்டத்தின் புதிய பிரதி பொலிஸ் மா அதிபராக சுஜித் வெதமுல்ல தனது கடமைகளை கடந்த சனிக்கிழமை பொறுப்பேற்றார்.

அம்பாறையில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிமனையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்ட பின்னர் சர்வமத பிரார்த்தனையுடன் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்த பதவியேற்பு நிகழ்வில் பிராந்தியங்களுக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-01)


# நிந்தவூர் பிரதேச சபை; அ. இ. ம. காங்கிரஸ் வசம்

நிந்தவூர், ஜூலை 03

நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக இரகசிய வாக்கெடுப்பு முறையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதம்பாவா அஸ்பர், உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் எம். எல். இர்பான் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அம்பாறை - நிந்தவூர் பிரதேச சபையின் அதிகார பதவிகளுக்கான தெரிவு நேற்று புதன்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆதம்லெப்பை முஹமது அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவி தெரிவை இரகசிய வாக்கெடுப்பாக நடத்துவதை பெரும்பான்மையினர் ஆதரித்தனர். இதன்படி, தவிசாளர் பதவிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஆதம்பாவா அஸ்பர், ஆதம்லெப்பை றியாஸ் ஆதம் ஆகியோர் போட்டியிட்டனர்.



இதில், ஆதம்பாவா அஸ்பர் 6 வாக்குகளை பெற்று தவிசாளராக தெரிவானார். றியாஸ் ஆதமுக்கு 5 வாக்குகள் கிடைத்தன. 13 உறுப்பினர்கள் கொண்ட சபையில் தேசிய மக்கள் சக்தியின் இருவர் நடுநிலை வகித்தனர்.

உபதவிசாளர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தியின் முகம்மது இப்ராலெப்பை இர்பான் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டார். இதையடுத்து அவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

(ஐ)

# நுகர்வுக்கு பொருத்தமற்ற கோழி இறைச்சிகள் அழிப்பு

திருகோணமலை, ஜூலை 03

கிண்ணியாவில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற கோழி இறைச்சிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கோழி இறைச்சிக் கடைகள் நேற்று முன்தினம் கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ. எம். எம். அஜித் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்த இறைச்சிகள் அழிக்கப்பட்டன.

இதன்போது, நுகர்வுக்கு பொருத்தமற்ற கோழி இறைச்சிகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன், அவற்றை வைத்திருந்த கடை உரிமையாளர்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

(ஐ)

# கல்முனை கடலரிப்பை தடுக்குமாறு கோரிக்கை


## மாவட்ட அரச அதிபரிடம் விடுப்பு

கல்முனை, ஜூலை 03

கல்முனை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல், கடற்கரைப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவை நேரில் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

கல்முனை கடற்கரை பகுதியில் கடலரிப்பால் சில பகுதிகள் அழிந்துள்ளன. அத்துடன்,



மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், கல்முனை கடற்கரையில் பல கட்டடங்களும் அழிவுக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, கடலரிப்பை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# போதைப்பொருள் விற்பனை கணவனும் மனைவியும் கைது

வாழைச்சேனை, ஜூலை 03

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கணவன், மனைவி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை - பன்சால வீதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இவர்களை விசேட அதிரடிப் படையினரும் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் போர் நிறுத்தம் இஸ்ரேல் ஏற்றுக்கொண்டது

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு




வாஷிங்டன், ஜூலை 03

**காஸாவில் 60 நாட்கள் போரை நிறுத்துவதற்கு இஸ்ரேல் ஏற்றுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்தத் தகவலை அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே கிட்டதட்ட இரண்டு ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகளும் முயற்சி எடுத்துள்ளன. இந்த நிலையிலேயே "60 நாட்கள் காஸாவில் போர் நிறுத்தம் செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, இரு ஆண்டுகளாக தொடர்ந்த போரில் 56 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ரஷ்யாமீது உக்ரைனின் ட்ரோன்கள் தாக்குதல்!

## மூவர் பலி; 35 பேர் படுகாயம்

கீவ், ஜூலை 02

ரஷ்யாவின் மத்திய பகுதியிலுள்ள நகரம் ஒன்றின்மீது உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்துள்ளனர். இதில், 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

உக்ரைன எல்லையிலிருந்து சுமார் 1,300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இஷெவ்ஸ்க் நகரிலுள்ள தொழிற்சாலை மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏவுகணைகள், ரேடார் உற்பத்தி செய்யப்படும் இராணுவ தொழிற்சாலை ஒன்றே இலக்கு வைத்துத் தாக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் பாதுகாப்பு சேவையால் இயக்கப்படும் நீண்ட தூர 2 ட்ரோன்களால் சுமார் 1,300 கிலோமீற்றர் தூரத்திலிருந்த குபோல் தொழிற்சாலைமீது தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஐ)

# உக்ரைனுக்கான ஆயுத ஏற்றுமதி நிறுத்தப்பட்டது

## அமெரிகா அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 03

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் தீவிரமடைந்துள்ளதால் அந்த நாட்டுக்கு சில ஆயுத ஏற்றுமதிகளை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

"அமெரிக்காவின் நலன்களை முதன்மைப்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டது", என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் அன்னா கெல்லி தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 2022இல் ரஷ்யா உக்ரைன்மீது படையெடுப்பை தொடங்கியது. அப்போது முதல் அமெரிக்கா உக்ரைனுக்கு பல ஆயிரம் கோடி டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கியது. ட்ரம்ப் நிர்வாகத்தை பொறுப்பேற்றது முதல் உக்ரைன்மீது பல உதவிகள் நிறுத்தப்பட்டு




வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்க ஆயுதங்கள் ஏற்றுமதி தொடர்பான கட்டுப்பாடுகள் குறித்து உக்ரைன் அரசாங்கம் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. அத்துடன், எந்தெந்த ஆயுத ஏற்றுமதிகள் நிறுத்தப்படுகின்றன என்பதையும் அமெரிக்க அதிகாரிகள் உடனடியாகத் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரொய்ட்டர்ஸ் நிறுவன செய்தியின்படி, வான் பாதுகாப்பு ஏவுகணைகள் ஏற்றுமதியும் அடங்கும் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா நீதிமன்றால் இடைநீக்கப்பட்டார்

பாங்கொக், ஜூலை 03

கம்போடிய செனட் தலைவர் ஹன் சென் உடனான தொலைபேசி உரையாடல் கசிந்த விவகாரம் தொடர்பாக தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்த நாட்டு நீதிமன்றம் இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

அயல் நாடான கம்போடிய எல்லையில் நிலவும் பதற்றங்களை தணிக்கும் நோக்கில், அந்த நாட்டின் முன்னாள் பிரதமரும் கம்போடிய செனட் தலைவருமான ஹன் சென் உடன், தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தொலைபேசியில் உரையாடினார். அப்போது, ஹன் சென் ஐ சமாதானப்படுத்தும் நோக்கில், தங்கள் நாட்டு இராணுவத் தளபதி குறித்து விமர்சித்து



பேசியுள்ளார். இந்த உரையாடலின் ஒலிப்பதிவு கசிந்ததை அடுத்து, தாய்லாந்து பிரதமருக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரித்த தாய்லாந்தின் அரசமைப்பு நீதிமன்றம், பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா நெறிமுறைகளை மீறினார் என்று குற்றஞ்சாட்டியது. இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட இருப்பதால், பிரதமரை பதவியில் இருந்து இடைநீக்கம் செய்தும் அரசமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து பேசிய பேடோங்டார்ன் ஷினவத்ரா, "எனது பணி தடைபடுவதை நான் விரும்பவில்லை. இருந்தாலும், நீதிமன்ற உத்தரவை ஏற்றுக்கொள்கிறேன். இந்த உத்தரவால் நான் கவலைப்படுகிறேனா என்று நீங்கள் என்னிடம் கேட்டால், ஆம் நான் கவலைப்படுகிறேன்," என்று தெரிவித்தார்.

ஒலிப்பதிவு கசிவை அடுத்து, தாய்லாந்தின் கூட்டணி அரசாங்கத்திலிருந்த பெரிய கட்சிகளில் ஒன்றான பூம்ஜைதாய் கட்சி வெளியேறியது. இதையடுத்து, தாய்லாந்து மன்னர் மகா வஜிரலோங்கோர்ன், புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். (ஐ)


# தனது வாரிசு உரிமையை அறிவிப்பாரா தலாய் லாமா?

புதுடில்லி, ஜூலை 03

நாடு கடத்தப்பட்ட திபெத்திய ஆன்மீக தலைவரான தலாய் லாமா எதிர்வரும் 6ஆம் திகதி 90ஆவது வயதை பூர்த்தி செய்கிறார். இதன்போது, தனக்கு அடுத்த தலாய் லாமா யார் என்பதை அவர் அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இதனிடையே, தலாய் லாமாவின் 90ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக நூற்றுக்கணக்கான அவரின் சீடர்கள் வட இந்தியாவில் கூடி வருகின்றனர். இந்த நிலையில், 15ஆவது திபெத்திய மத மாநாடு நேற்று கூடியுள்ளது.

முன்னதாக, தலாய் லாமா தனது 90ஆவது பிறந்தநாளில் தனது வாரிசுரிமை குறித்த விவரங்கள் வெளியிடப்படும் என்று கூறியிருந்தார். திபெத்திய பௌத்த மதத்தின் 600 வருடங்கள் பழமையான நிறுவனத்தின் தலைவரான தலாய் லாமா தனது



மத.நிறுவனத்தை தொடர்வதா இல்லையா என்ற குழப்பத்தில் உள்ளார். இந்த நிலையில், அவரின் வாரிசு ஒரு பெண்ணாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதனிடையே, கடந்த திங்கட்கிழமை தொடங்கிய தலாய் லாமாவின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் இந்திய அமைச்சர்கள் உட்பட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொள்வார்கள் என்று தெரிய வருகிறது.

திபெத்திய பௌத்த மதத் தலைவரான தலாய் லாமா சீன எதிர்ப்பு போக்கு கொண்டவர். 1959ஆம் ஆண்டு திபெத்தில் சீன ஆட்சிக்கு எதிரான தோல்வியடைந்த கிளர்ச்சிக்கு பின்னர் அவர் இந்தியாவில் தஞ்சமடைந்தார். வட இந்திய மலை நகரமான தர்மசாலாவில் நாடு கடந்த அரசாங்கத்தை அவர் அமைத்தார், மேலும் திபெத்தின் மீதான பீஜிங்கின் இறுக்கமான கட்டுப்பாட்டை எதிர்ப்பவர்களுக்கு மாற்று அதிகார ஆதாரமாகக் கருதப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)


# ரஷ்ய பாதுகாப்பு முன்னாள் பிரதி அமைச்சருக்கு சிறை!

மொஸ்கோ, ஜூலை 03

ஊழல் வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட ரஷ்யாவின் பாதுகாப்பு முன்னாள் பிரதி அமைச்சருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 வருடங்களாக போர் தொடர்ந்து வரும் நிலையில் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை இவர் முறைகேடாக பயன்படுத்தினார் என்று குற்றசாட்டு எழுந்தது. இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஏப்ரலில் அவரின் பதவி பறிக்கப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார்.

இவர் மீது தொடரப்பட்ட ஊழல் வழக்கில் 5 கோடி டொலர் (நம் நாட்டு மதிப்பில் சுமார்



1,500 கோடி ரூபாய்) ஊழல் செய்திருப்பது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, மொஸ்கோ நீதிமன்றம் தைமூர் இவானாவுக்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயுடனான டெஸ்ட்; தென்னாபிரிக்கா பெருவெற்றி!

புலவாயோ, ஜூலை 03

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை 328 ஓட்டங்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி புலவாயோவில் கடந்த சனிக்கிழமை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 418 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய சிம்பாப்வே அணி 251 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. 167 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய தென்னாபிரிக்க அணி வியான் முல்டெரின் அபார சதத்தின் உதவியுடன் (147 ஓட்டங்கள்) 82.5 ஓவர்களில் 369 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால் சிம்பாப்வே அணிக்கு 537 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து, இமாலய இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாப்வே அணி 3ஆவது நாள் ஆட்ட நேரம் முடிவில் 18.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 32 ஓட்டங்களை அடித்திருந்தது.

நான்காவது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவாக விக்கெட்களை இழந்தது.

இதில், எர்வின் 49 ஓட்டங்கள், மசகட்சா 57 ஓட்டங்கள், முசரபானி 32 ஓட்டங்கள் தவிர, மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 66.2 ஓவர்கள் தாக்குப்பிடித்த சிம்பாப்வே அணி 2ஆவது இன்னிங்ஸில்



208 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 328 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் கார்பின் போஷ் 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். (ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ் ஜெசிகா, முசெட்டி தோல்வி!

லண்டன், ஜூலை 03

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, இத்தாலி வீரர் லோரென்சோ முசெட்டி ஆகியோர் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்தனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் புகழ்பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த மகளிருக்கான போட்டியில் தரவரிசையில் 3ஆவது இடத்திலுள்ள அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, தரவரிசையில் 116-வது இடத்தில் உள்ள இத்தாலியின் எலிசபெட்டா கோசியாரெட்டோவுடன் மோதினார். இதில் எலிசபெட்டா கோசியாரெட்டோ 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் ஜெசிகா பெகுலாவை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தார்.

இதேபோன்று, ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் முதல் நிலை வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னர், சக நாட்டைச் சேர்ந்த 95ஆம் நிலை வீரரான லூக்கா நார்டியை எதிர்த்து விளையாடினார். இதில் ஜன்னிக் சின்னர் 6-4, 6-3, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதேசமயம், 7ஆம் நிலை வீரரான இத்தாலியின் லாரன்சோ முசெட்டி 2-6, 6-4, 5-7, 1-6 என்ற செற் கணக்கில் 126ஆம் நிலை வீரரான ஜார்ஜியாவின் நிகோலோஸ் பாசிலாஷ்விலியிடம் தோல்வி அடைந்தார். (ஐ)

## பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு சரியான நடைமுறை தேவை!

### மேற்கிந்தியத் தீவுகளின் சமி

கயானா, ஜூலை 03

மேற்கிந்தியத் தீவுகளின் வீராங்கனைகள் மீதான பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டுகள் தொடர்பில் "நீதி நிலைநாட்டப்பட வேண்டும்" என்றும் "சரியான செயல்முறை" பின்பற்றப்பட வேண்டும் எனவும் அந்த அணியின் தலைமை பயிற்றுநர் டெரன் சமி கூறியுள்ளார்.

அண்மையில் ஊடகம் ஒன்று அவர் மீது பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியது. அவர்மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் 2023ஆம் ஆண்டுக்கு முந்தையவை என்று கூறப்படுகிறது.


இந்த நிலையில், டெரன் சமி கூறுகையில், "ஊடகங்களில் என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். நான் எனது வீரர்களுடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறேன். அவர்களின் மனநிலை நன்றாக இருப்பதை உறுதி



செய்வதற்காக நான் அவர்களுடன் உரையாடினேன்.

"நாங்கள் நீதியை நம்புகிறோம். நாம் நீதி வழங்கப்பட வேண்டும் என்று நம்பும் ஒரு சமூகம். இருப்பினும், ஒரு செயல்முறை உள்ளது. உரிய நடைமுறை மற்றும் சரியான அமைப்பு பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய எங்களால் முடிந்த அனைத்து வழிகளிலும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். ஒரு கிரிக்கெட் சபையாக - தலைமை பயிற்றுநராக எனக்கும் அனைவருக்கும் நீதி வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.", என்றார்.

## சென்னை அணிக்கு மாறுகிறாரா சஞ்சு!



மும்பை, ஜூலை 03

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவரான சஞ்சு சாம்சன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு மாறவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். இருபது - 20 தொடர் அண்மையில் நிறைவடைந்தது. இதில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இந்த நிலையில், அடுத்த ஐ. பி. எல். தொடருக்காக அணி மாற்றம் தொடர்பில் தற்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் சஞ்சு சாம்சனை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடந்து முடிந்த தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 9ஆவது இடத்தை பிடித்தது. காயம் காரணமாக சஞ்சு சாம்சன் பல போட்டிகளில் விளையாடவில்லை. இதனால், அவருக்கு பதிலாக ரியான் பராக் அணியை வழிநடத்தினார். இதனிடையே, சஞ்சு சாம்சனுக்கும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கும் இடையே முரண்பாடுகளும் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையிலேயே அவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இணையவுள்ளார் என்று கூறப்படுகிறது. வீரர்கள் பரிமாற்றம் மூலம் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "நாங்கள் நிச்சயமாக சஞ்சுவைப் பார்க்கிறோம். அவர் ஒரு இந்திய விக்கெட் காப்பாளர் மற்றும் தொடக்க ஆட்டக்காரர். எனவே, அவர் கிடைத்தால் எங்கள் அணியில் நிச்சயமாக சேர்ப்போம். ஆனால், அவருக்காக யாரை விட்டுக்கொடுப்பது என்பது குறித்து நாங்கள் முடிவெடுக்கவில்லை, ஏனெனில் விசயம் அவ்வளவு தூரம் செல்லவில்லை. ஆனால், கொள்கையளவில், நாங்கள் ஆர்வமாக உள்ளோம்" என்றார். (ஐ)

## ரி-20 தரவரிசை: மந்தனா 3ஆம் இடத்தில்!

டுபாய், ஜூலை 03

இந்திய மகளிர் அணியின் உபதலைவர் ஸ்மிருதி மந்தனா ஐ. சி. சியின் இருபது - 20 தரவரிசையில் மூன்றா வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அவர், இங்கிலாந்துக்கு எதிராக 62 பந்துகளில் 112 ஓட்டங்கள் விளாசி, இந்தியா 97 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற காரணமாக இருந்தார். இதன்மூலம் 771 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்துக்கு முன்னேறி யுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பெத் மூனி 794 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். மேற்கிந்தியத் தீவுகளின் ஹேலே மேத்யூஸ் 774 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளார்.

இதேநேரம், ஸ்மிருதி மந்தனா ஒருநாள் போட்டிக் கான துடுப்பாட்ட தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகத்தில்

உயிரிழந்தனர்.

விபத்துக் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நிபந்தனை...

பெரு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "இலங்கையில் நல்ல அறிகுறிகளைக் காட்டும் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இது வெறும் அரசாங்கம் மட்டுமல்ல. இந்தியாவின் பரந்த சமூகமும், வணிகங்களும் அதன் ஒரு பகுதியாக, ஒரு தேசிய முயற்சியாக எங்கள் முயற்சிகளை ஆதரிக்கின்றன. இந்த பிரதிநிதிகள் குழு மிக விரிவான துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நமது உறவின் கிட்டத்தட்ட அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கியிருப்பதற்காகவும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த ஆறு மாதங்களாக எமது உறவில் நாம் கண்ட மிகப் பெரிய வெற்றிகளின் பின்னணியில்தான் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. கடந்த டிசெம்பரில் ஜனாதிபதி அநுர குமாரவின் இந்திய பயணத்துடன் இது தொடங்கியது. அவர் பதவிக்கு வந்த பின்னர் மேற்கொண்ட முதல் வெளிநாட்டு பயணம் அதுவாகும். அதைத் தொடர்ந்து ஏப்ரலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் மிக வெற்றிகரமான இலங்கை பயணம் நடைபெற்றது.

புதிய அரசாங்கத்தால் இலங்கையில் வரவேற்கப்பட்ட முதல் தலைவர் இந்திய பிரதமர் மோடி என்பது எமது பார்வையில், இரு தரப்பு உறவின் மிக அத்தியாவசியமான தன்மையை பிரதிபலிக்கிறது. நாங்கள் 'அயல் நாடுகள் முதலில்' என்ற கொள்கையை கொண்டுள்ளோம். ஆனால், இலங்கை சில விஷயங்களிலாவது 'இந்தியா முதலில்' என்பதை நிரூபித்துள்ளது. இது ஒரு மிகமிக நேர்மறையான அறிகுறியாகும்.

ஜனாதிபதியின் பயணத்தின்போது வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை மற்றும் பின்னர் பிரதமரின் பயணத்தின்போது கையெழுத்திடப் பட்ட பல ஒப்பந்தங்கள் மூலம் எமது உறவை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஒரு மிக மிக வலுவான அடிப்படை உள்ளது. இது உறவின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்தியுள்ளது.

டிஜிற்றல் மயமாக்கல், எரிசக்தி, வர்த்தகம், முதலீடு, மேம்பாட்டு ஒத்துழைப்பு ஆகியவை எமது உறவின் ஐந்து முக்கிய தூண்களாகும். இவற்றில் ஒவ்வொன்றும் முன்னேறியுள்ளன. ஒவ்வொன்றும் புதிய வாய்ப்புகளை வழங்குகின்றன. நாங்கள் இலங்கைக்கு உண்மையான அர்ப்பணிப்புடன் இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 13 அல்லது 14 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்குக் கும் அதிகமாக உதவிகள் வழங்கப்பட் டுள்ளன.

2022இல் நாங்கள் இலங்கைக்கு வழங்கிய அவசரகால உதவியின்போது வழங்கப்பட்ட கடன்களுக்கான மறுசீரமைப்பு இம்பெற்றுள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கையின் மிகவும் நம்பகமான நண்பராகவும் - மிகவும் நம்பத் தகுந்த பங்காளியாகவும் உள்ளது. நிபந்தனை இல்லாமல் இதை நாங்கள் செய்கிறோம். பதிலுக்கு நாங்கள் எதையும் கேட்பதில்லை. நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை வளர்ப்பதிலும், இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் நீடித்த உறவுகளை உருவாக்குவதிலும் உங்கள் உதவி மட்டுமே எங்களுக்குத் தேவை. இந்த நன்மைகள் இலங்கைக்கு அதிகமாக இருந்தாலும் நாங்கள் பொருட்படுத்தமாட்டோம். ஏனென்றால், இலங்கை எமது சகோதர நாடு, இன்று நாம் இதுவரை கண்டிராத மிகச் சிறந்த உறவைக் கொண்டிருக்கிறோம் - என்றார். (ஐ)

## அத்துமீறும்...

மயிலிட்டி துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. அவை அரசுடமையாக்கப்பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறுவதை நிறுத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் கைதுகள் தொடரும். படகுகள் பறிமுதல் செய்யப்படும். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனவர் பிரச்னை தொடர்பில் இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கை யிலும் இறங்கியுள்ளோம். கடற்படைக்கு கூடுதல் வளங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தடுத்து நிறுத்தப்படும். இலங்கை கடற்படையினர் மிகவும் கட்டுக்கோப்பாகவே நடந்துவருகின்றனர்.

இந்திய மீனவர்களின் ட்றோலர் படகுகளால்தான் இலங்கை கடல்வளம் நாசமாக்கப்பட்டுள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால் இலங்கை கடற்பரப்பு கடல் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது - என்றார். (ஐ)

## 37 மனித...

புதன்கிழமை ஏழா வது நாளாகவும் அகழ்வுப் பணி தொடர்ந்திருந் தது. இதன்போது, ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த நிலையில் 4 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதனால், இதுவரை 37 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று சட்டத்தரணிகள் நிரஞ்சன், ரனித்தா ஆகியோர் தெரிவித்தனர்.

இதனிடையே, தற்போது தோண்டப்படும் இடத்தின் அருகாக வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகிக்கப்படுகிறது. இதனடிப்படையில் அந்தப் பகுதிகளில் நேற்று துப்புரவு பணிகள் ஆரம்பமாகின. இந்த துப்புரவு பணிகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் பீடத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது, தோண்டப்பட்ட மனிதப் புதைகுழியில் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களின் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் புத்தகப் பை, பொம்மை, சிறுவர் அணியும் சப்பாத்து, பெண்கள் அணியும் காப்பு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அஸ்வெசும...

பட்டுள்ளது.

தகவல் சேகரிப்பின் இரண்டாம் கட்டத்தின்போது வழங்கப்பட்ட தகவல்களில் திருத்தம் காணப்படும் விண்ணப்பதாரர்கள், கொடுப்பனவுகளைப் பெற தகுதியான பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாத நபர்கள் மேன்முறையீட்டை செய்ய முடியும்.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கான ஆரம்ப விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டாலும், வீட்டு விவர தகவல்களை சேகரிக்க அரசாங்க கள அதிகாரி ஒருவர் குறித்த வீட்டுக்கு செல்லவில்லை என்றால், அத்தகைய விண்ணப்பதாரர்களும் மேன்முறையீட்டை சமர்ப்பிக்கலாம்.

மேன்முறையீடு செய்வதற்கு முன்னர், அனைத்து மேன்முறையீட்டாளர்களும் வீட்டுவசதி தகவல் சேகரிப்பின் போது ஐறுஆளு தரவுத்தளத்தில் தங்கள் குடும்பத்தைப் பற்றி வழங்கப்பட்ட தகவல்களை பார்வையிட வேண்டும். மேன்முறையீட்டாளர்கள் மற்றும் ஆட்சேபனையாளர்கள் www.wbb.gov.lk என்ற உத்தியோகப்பூர்வ வலைத்தளத்துக்கு பிரவேசித்து, பின்னர் தங்களது மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகளை இணையவழியாகவும் சமர்ப்பிக்க முடியும்.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை இணையவழியாக சமர்ப்பிக்கும்போது தங்கள் பகுதியில் உள்ள விதாதா வள மையங்களின் உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சபையில் ஆசனம் பின்னால் ஒதுக்கீடு; தேசிய மக்கள் சக்தியினர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 03

வவுனியா மாநகர சபையில் தனக்குரிய ஆசனம் உரிய இடத்தில் வழங்கப்படவில்லை என தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் க.விஜயகுமார் குற்றம்சாட்டியுள்ளார்.

வவுனியா மாநகர சபையின் முதலாவது மாதாந்த கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற கன்னி உரையில் அவர் தனது ஆசன ஒதுக்கம் தொடர்பாக குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதற்கு பதில் அளித்த ஆணையாளர், வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும், ஏற்கனவே சபைகளில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்ற அனுபவத்தின் அடிப்படையிலுமே ஆசன வரிசை ஒதுக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர், நீங்கள் சொல்லும் முறைமை நகரசபை கட்டளைச்சட்டத்திற்குரியதாக இருக்கும் என நினைக்கிறேன். இங்கே இருக்கும் அனைவரும் மாநகர சபைக்கான புதிய உறுப்பினர்களாகவே கருதப்படவேண்டும்.

அந்தவகையில் வர்த்தமானியின் பிரகாரம் தனக்கு நான்காவதாக ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நான் எப்போதும் முன்நோக்கிச் செல்பவன். பின்னுக்கு செல்வதால் சில தெளிவுகள், விளக்கங்கள் குறைவாக உள்ளது. எனவே அடுத்த அமர்வில் இது தொடர்பாக முழுமையாக தெளிவுபடுத்து மாறு கேட்டுகொள்கிறேன் - என்றார்.

இது தொடர்பாக அடுத்த கூட்டத்தில் முழுமையான தெளிவை வழங்குவதாக சபை முதல்வர் பதில் அளித்தார்.(அ)

# சர்ச்சைக்குரிய இலத்திரனியல் வீஸா வழக்கு; சிக்கப்போகும் ரணில் அரசின் முக்கிய புள்ளி

கொழும்பு, ஜூலை 03

சர்ச்சைக்குரிய இலத்திரனியல் விஸா முறைக்கேட்டில் குற்றத்தை ஒப்புக் கொண்ட முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சர் ஒருவரும் சிக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலத்திரனியல் விஸா வழங்குவதை நிறுத்திவிட்டு, பழைய முறையைப் பயன்படுத்தி விஸாக்களை மீண்டும் வழங்குவதற்கான நீதிமன்ற உத்தரவை மீறியமை தொடர்பில், நீதிமன்ற அவமதிப்பு செய்த வழக்கில் ஹர்ஷ இலுக்பிட்டிய தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு திணைக்களம் பொதுபாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற நிலையில் அப்போதைய பொது பாதுகாப்பு அமைச்சரையும், அப்போதைய செயலாளரையும் குறிப்பிட்டு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலத்திரனியல் விஸா விநியோக சர்ச்சையில் அப்போதைய பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் சிக்குவாரா என அவை கேள்வியெழுப்பியுள்ளன.

முன்னதாக 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலத்திரனியல் விசா நடைமுறையில் இருந்த சிக்கல்கள் தொடர்பில் அப்போதைய பொது பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் டிரான் அலஸ் பல கருத்துக்களை ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

இதன் பின்னணியிலேயே டிரானுக்கும் இலத்திரனியல் விஸா சர்ச்சைக்கும் இடையில் தொடர்புகள் உள்ளனவா என கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இதன்படி பிரதிவாதியான குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு தண்டனை விதிக்கும் உத்தரவு இந்த மாதம் 24 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டியருந்த நிலையில் குறித்த கேள்விகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. (அ)

## அமெரிக்காவின்

பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த வரி கொள்கையால் இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் திகைப்படைந்தது. இது தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

எதிர்வரும் 9ஆம் திகதியுடன் அந்த கால அவகாசம் நிறைவடைகிறது. இதனால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்காக நிதி அமைச்சின் தலையீட்டுடன் பல சுற்று பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

அமெரிக்காவின் வர்த்தக திணைக்களத்துடன் மெய்நிகர் ஊடாக பல்வேறு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. அது மாத்திரமின்றி எமது பிரதிநிதிகள் குழு இரு சந்தர்ப்பங்களில் பேச்சுகளை முன்னெடுத்திருக்கிறது. 9ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை நிவாரணமொன்று கிடைக்கக் கூடிய நிலைமையை அடைய முடியும் என எதிர்பார்க்கிறோம்.

எம்மால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளுக்கமைய 9ஆம் திகதி இந்த வரிக் கொள்கையில் எமக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு திருத்தங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம். இலங்கை சார்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் பிரதிபலனாக எமக்கு சலுகை கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

## அரியாலை...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கொன்று கடந்த ஜூன் 29 ஆம் திகதி அழைக்கப்பட்டது. இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம், நீதி அமைச்சின் தரப்பில் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்குக்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும். வழக்கு இடம்பெறுவதால் இது குறித்த மேலதிக விடயங்களை தம்மால் தெரிவிக்க முடியாது - என்றார்.

இதேவேளை, செம்மணி பகுதியில் அணையா விளக்கு போராட்டம் இடம்பெற்ற வேளையில் அங்கு சென்ற அமைச்சருக்கு எதிர்ப்பு வெளிடப்பட்டமை தொடர்பிலான கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்தி ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு இலங்கையில் 35 ஆசிரியர்கள் தெரிவு

கொழும்பு, ஜூலை 03

இந்தியாவின் ஆக்ரா நகரத்தில் உள்ள கேந்திரிய இந்தி சன்ஸ்தானில் நடைபெறவிருக்கும் இந்தி ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு இலங்கையில் உள்ள 35 இந்தி ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளில் கடமையாற்றும் 35 இந்தி ஆசிரியர்களே இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள இந்தி ஆசிரியர்களுக்கான முதல் பயிற்சித் திட்டம் இதுவாகும்.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் சுவாமி விவேகானந்த கலாசார மையம் மற்றும் ஆக்ராவில் உள்ள கேந்திரிய ஹிந்தி சன்ஸ்தான் ஆகியன இணைந்து இந்த பயிற்சித் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட 35 இந்தி ஆசிரியர்களுடன் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா உரையாடினார்.

இந்த உரையாடலின்போது இந்திய தூதுவர், தெரிந்தெடுக்கப்பட்ட 35 இந்தி ஆசிரியர்களையும் பாராட்டினார்.

இந்த பயிற்சித் திட்டத்தின் ஊடாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கல்வி மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தப்படும் எனவும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இதன்போது தெரிவித்தார்.

இந்த பயிற்சித் திட்டத்தின்போது, தெரிந்தெடுக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு இந்தியாவின் கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிடுவதற்கு கேந்திரிய இந்தி சன்ஸ்தான் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கடந்த ஆண்டுக்கான வரி வருமான வசூல் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 03

2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டிற்கான வரி வருமானம் 42.22 வீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஆண்டில் 2,620.07 பில்லியன் ரூபாய் வரி வருமான வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், இது ஆண்டுக்கான இலக்கில் 96 சதவீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேம்பட்ட பொருளாதார செயல்திறன் மற்றும் திறமையான வரி நிர்வாகம் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 4.3 ட்ரில்லியனாக உயர்ந்துள்ளதாகவும், இது முந்தைய ஆண்டை விட 32.21 சதவீதம் அதிகமாகும் எனவும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மதுபான உற்பத்திக்கு அரிசி இறக்குமதி செய்ய அனுமதி!

கொழும்பு, ஜூலை 03

மதுபான உற்பத்திக்காக அரிசி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றும் அதற்கான வசதிகள் வழங்கப்படும் என்றும் விவசாயம், நீர்ப்பாசனம், காணி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.

கன்னொருவ கால்நடை பொருட்கள் மற்றும் சுகாதாரத் துறையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்தைக்கு மதுபான உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் அரிசியின் பிரச்னையைத் தடுக்க ஒரு பயனுள்ள வழிமுறை வகுக்கப்படும்.

சீரற்ற வானிலை காரணமாக யால அறுவடையில் நெல் உற்பத்தி இலக்கை அடைய முடியவில்லை. இது நுகர்வோரைப் பாதிக்கலாம்.

இருப்பினும், அரசாங்கம் அதை நுகர்வோருக்கு ஒரு சவாலாக மாற்ற அனுமதிக்காது, மேலும் நாட்டின் அரிசி தேவை அரிசி இறக்குமதியால் நிரப்பப்படும்-என்றார். (அ)

# செம்மணி வழக்குகளை இணைக்க நடவடிக்கை!

## சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா

யாழ்ப்பாணம், ஜூலை 03

**பழைய செம்மணி புதைகுழி வழக்கும் புதிய செம்மணி புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந்தாலும், முறையான நீதிமன்ற அனுமதியுடன் இரு வழக்குகளையும் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தாம் ஆலோசனை செய்து வருவதாக, பாதிக்கப்பட்டவர்கள் தரப்பு சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பழைய செம்மணி புதைகுழி வழக்கு நடவடிக்கையில் ஈடுபட்ட பிரதான சட்ட வைத்திய அதிகாரி அகழ்வு நடந்த பிரதேசத்துக்கு வருகை தந்தார். தற்போது அகழ்வுப் பணியில் ஈடுபடும் சட்ட வைத்திய அதிகாரியோடு பேசி கடந்த அகழ்வுப் பணி தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார்.

அந்நிலையில், பழைய செம்மணி வழக்கும் புதிய செம்மணி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந்தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புபடுத்த வேண்டிய நிலைமை இருப்பதனால் முறையான நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பழைய செம்மணி வழக்கை புதிய வழக்குடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

ஏற்கனவே தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா குழுவினரால் அடையாளப்படுத்தப்பட்ட சந்தேகத்துக்கிடமான பகுதிகள் நீதிமன்ற அனுமதிக்கமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்களின் உதவியுடன் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் சேர்ந்து தற்போது துப்பரவாக்கப்பட்டு பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து வரும் நாட்களில் அப்பகுதிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுப்படும்-என்றார். (அ)

# மருந்து பொருட்கள் கொள்முதல் செய்ய புதிய முறைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 03

மருந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முயற்சியாக, அரசாங்கத்திற்கு அரசு ஏற்பாடுகளின் கீழ் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான புதிய வழிமுறைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

மே 19ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அத்தியாவசிய மருந்துகளை நேரடி அரசாங்க ஒப்பந்தங்கள் மூலம் பெறுவதற்கு பொருத்தமான நாடுகளை அடையாளம் காணும் ஒரு அமைப்பை உருவாக்கும் பணியில் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி அளித்தது.

அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மற்றும் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அவதானிப்புகளைப் பெற்ற பிறகு, ஒரு வரைவு வழிமுறை இப்போது இறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி,

அவசரமாகத் தேவைப்படும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக பொருத்தமான நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழி வுக்கு அமைச்சரவை அனுமதியளித்தது.

இந்த கட்டமைப்பின் கீழ், வழக்கமான விநியோகச் சங்கிலிகள் மூலம் பாதுகாக்க கடினமான பொருட்களை வாங்குவதற்கு அந்த அரசாங்கங்களால் பரிந்துரைக்கப் பட்ட நிறுவனங்களுக்கும் மாவட்ட மருந்துக் கழகத் திற்கும் இடையே நேரடி ஒப்பந்தங்களும் கையெழுத்தி டப்படும். (அ)

# எரிபொருள் கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடுகள்!

கொழும்பு, ஜூலை 03

கடந்த காலங்களில் எரிபொருள் கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடுகளுக்கு இழப்பீடு இன்னும் வழங்கப்பட்டு வருவதாகவும், இவை அனைத்தும் நிர்வகிக்கப்பட்டு விலை சூத்திரத்தின்படி எரிபொருள் விலைகள் நிர்ணயிக்கப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொமிஷன் வாங்கியவர்கள் வீட்டுக்குச் சென்றவுடன் கமிஷன்களால் ஏற்படும் சேதம் முடிவடையாது என்றும், அது தொடர்ந்து ஒரு சுமையாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலத்தில் எண்ணெய் கொள்முதலில் ஏற்பட்ட முறைகேடுகளுக்கு நாம் இன்னும் பணம் செலுத்தி வருகிறோம்.

இதையெல்லாம் நிர்வகிக்க தற்போதைய விலை நிர்ணய சூத்திரம் மட்டுமே தற்போது உள்ள ஒரே நியாயமான முறையாகும்.

எண்ணெய் நிறுவனத்திற்கு உண்மையில் கடனை செலுத்த வேண்டிய அவசியம் இல்லாதிருந்தால், கடந்த காலத்தில் இதுபோன்ற மோசடிகள் நடந்திருக்காவிட்டால், மக்களுக்கு இன்னும் அதிக நீதி செய்திருக்க முடியும்.

ஏனென்றால், முந்தைய அரசாங்கம் செய்தது அந்த அமைச்சர்கள் வீட்டிற்குச் செல்வதால் மட்டும் முடிந்துவிடாது. அதுவொரு இழப்பாகவே இருக்கும்-என்றார். (அ)

# உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு வெளிநாட்டு பல்கலையில் பட்டப்படிப்பு

கொழும்பு, ஜூலை 03

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் முதல் பட்டப்படிப்பைத் தொடர உதவித்தொகை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின்படி "நாகரிகக் குடிமகனை - மேம்பட்ட மனித வளத்தை" உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர் சர்வதேச தரவரிசையில் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதல் பட்டப்படிப்பைத் தொடர உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்த 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், சர்வதேச பல்கலைக்கழக தரவரிசை குறியீடுகளில் முதல் 500 இடங்களுக்குள் இருக்கும் மற்றும் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து அதிகபட்சமாக 04 ஆண்டுகளுக்கு பட்டப்படிப்புகளை முடிக்க உதவித்தொகை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 200 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கத் திட்டமிட்டுள்ளது, மேலும் 2025 ஆம் ஆண்டுக்கு அதன் முதல் கட்டத்தின் கீழ் 20 முதல் 50 மாணவர்களைத் தேர்ந்தெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் முக்கிய பாடப் பிரிவுகளில் அதிக இசட்-மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும், மேலும் அந்த விண்ணப்பங்களில் இருந்து பொருத்தமான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கொண்ட நிபுணர் நேர்காணல் குழுவால் செய்யப்படும்.

அதன்படி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் முன்மொழியப்பட்ட உதவித்தொகை திட்டத்தை செயல்படுத்த சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.